**செய்தி வெளியீடு எண்: 415** **நாள் : 19.08.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழக அரசில் உருவாக்கப்பட்டு செயல்பட்டுவரும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் "மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்" குறித்து ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில், இன்று (19–8–2015), சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.**

=====

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், இளைஞர்களுக்கு அவர்களது வளரும் பருவத்திலேயே சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் புதிய புரட்சிகர திட்டமாக மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க ஆணையிட்டார்கள்.

இன்றைய உலகில் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களது கற்றலுக்கு கணினி இன்றியமையாததாக உள்ளதால், அனைத்து மாணவர்களாலும் தங்களது நிதியிலேயே தமக்கென ஒரு தனி கணினி வாங்கிட இயலாது என்பதை கருத்தில் கொண்டு, விரைந்து வளர்ந்துவரும் வேலைவாய்ப்பு சூழலில் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள மாணவர்கள் தனித்தகுதி பெற்றிட வேண்டும் என்ற குறிக்கோளினை அடைந்திட உறுதி கொண்டுள்ளது. மேலும், மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காகவும், அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குவதற்காகவும், மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் புதுமையான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் இத்திட்டம் 2011–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்படி, 2011–12 முதல் 2012–13ஆம் ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களுக்கு இப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

2013–14ம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு படிக்கும் மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயன்பெற்று வருகிறார்கள்.

முதற்கட்டமாக 2011–12ஆம் ஆண்டில் 8,67,825 மாணவ, மாணவிகளுக்கும், 2012–13ஆம் ஆண்டில் 7,17,498 மாணவ, மாணவிகளுக்கும், 2013–14ஆம் ஆண்டில் 5,30,080 மாணவ, மாணவிகளுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுவிட்டன.

முதற்கட்டமாக, 2011–12ஆம் ஆண்டில், ரூ.1265.44 கோடியும், இரண்டாவது கட்டமாக, 2012–13ஆம் ஆண்டில், ரூ.1219.20 கோடியும் செலவு செய்யப்பட்டுள்ளன. 2013–14ஆம் ஆண்டில் ரூ. 1500.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 931.42 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், நான்காவது கட்டமாக 2014–15ஆம் ஆண்டில் 5.50 இலட்சம், 2015–16ஆம் ஆண்டில் 5.50 இலட்சம் என மொத்தம் 11.00 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 2014–15 மற்றும் 2015–16ஆம் ஆண்டுகளில் ரூ.2,200.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.6465.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.3,416.06 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை, இருபத்திஇரண்டு இலட்சத்திற்கும் மேலான மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் இன்று ஆய்வு செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைத்து மாவட்டங்களிலும், மாணவ, மாணவிகளுக்கு வழங்குவதற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் பெறப்படும் மடிக்கணினிகளை, சோதனை செய்தல், பாதுகாப்பாக வைத்து பாதுகாத்தல், விநியோகம் செய்தல், இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள சேவை மையங்களின் செயல்பாடுகள், ஆகியவை குறித்து ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் மடிக்கணினிகளை உரிய சோதனைக்குப் பின், எவ்வித காலதாமதம் இன்றி, உடனடியாக மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

அனைத்து மாவட்டங்களிலும், மடிக்கணினிகள் வைக்கப்படும் இடங்களுக்கான பாதுகாப்பு மற்றும் சேவை மையங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட மற்றும் மாநில

அளவிலான அலுவலர்கள் அவ்வப்போது கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிறைவாக, மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள மடிக்கணினியின் முழு இலக்கினையும் 2015 டிசம்பர் மாதம் இறுதிக்குள் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. தா.கி.இராமச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப. அவர்கள், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப., அவர்கள், தமிர்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. முனைவர் ச.கண்ணப்பன் அவர்கள், மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**